REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : ஆடி 25உ வெள்ளி (9—8—57) ★ ★ வெளியீடு: ஆடி 26உ சனி (10—8—57) [இதழ் 47

சென்னையில் ஒரு தபால் ஊழியர் பயிற்சி நிலையம்

புதுடில்லி, ஆக. 8—

தபால்-தந்தி ஊழியர் பயிற்சி நிலையம் ஒன்றினைத் தென்னாட்டில் நிறுவவேண்டும் என்று, இலாகா மந்திரி லால்பகதூர் சாஸ்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'சென்னை சர்க்கார், அப்படி ஒரு பயிற்சி நிலையம் நிறுவ நிலம் இலவசமாகத் தரச்சம்மதித்திருக்கின்றனர் ; எனவே, அந்தப் பயிற்சி நிலையத்தை அங்கு நிறுவலாம் ; இப்போது இந்தியாவில் ஒரே பயிற்சி நிலையம்தான் உ. பி. மாநிலத்தில் சஹரன்பூர் எனும் இடத்தில் இருக்கிறது' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

'வறுமை ஒழித்தல் - அறியாமை போக்கல்- கிராம நிலைமையை உயர்த்தல் பொதுப் பிரச்சினைகள்'

'அரசியல் கருத்து வேற்றுமைகளுக்கு இடமில்லாத இப்பிரச்னைகளில் எந்தக்கட்சியும் ஒத்துழைக்கமுடியும்'

'கிராம மக்களின் நிலையை நேரடியாகப் பார்த்துத் தெரிந்துள்ள தலைவராக முதலமைச்சரை வரவேற்கிறேன்'

தண்டலம் பொதுநல மாநாடு பற்றி அண்ணு தரும் விளக்கம்

"கிராமப்புற மக்களால் என்னிடம் தரப்பட்ட மனுக்களை துருவித்துருவிப் பார்த்தேன். ஒரு மனுவிலாவது, 'எங்களுடைய கிராமத்திற்கு ஒரு பெரிய வைத்தியசாலை தேவை' என்று யாரும் கேட்கவில்லை; 'எங்களுடைய கிராமத்திலே ஒரு கல்லூரி வையுங்கள்'—யரரும் கேட்கவில்லை; 'எங்களுடைய கிராமத்தாருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துங்கள்'—யாரும் கேட்கவில்லை.

"இவைகளைக்கூட கேட்க முடியாத அளவிற்கு அவர்கள் வறுமையிலே அழுத்திவைக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று அவர்கள் விரும்புவதெல்லாம், குடியிருப்பதற்கு குச்சு; அவர்கள் இன்றையத் தினம் கேட்பதெல்லாம் தங்கள் கிராமத்திற்கும் மற்ற கிராமத்திற்கும் நல்ல பாதை; அவர்கள் வேண்டிக் கேட்டுக்கோள்வதெல்லாம் குடிதண்ணீர் வசதி; தங்கள் விவசாயத்திற்குத் தேவையான வழிவகைகள்; இவைகளைத்தான் அவர்கள் இன்றையத் தினம் தங்களிடத்தில் நாடி நிற்கின்றார்கள்.

"தங்களுடைய அன்பு கலந்த இதயத்திலிருந்து நல்ல வார்த்தைகளையும், அந்த நல்ல வார்த்தைகள் மூலம் உருவாக்கத் தக்க நல்லத் திட்டங்களையும், இந்தத் தொகுதிக்கு நீங்கள் தரவேண்டும் என்று நான் பணிவன்போடு உங்களை வேண்டிக்கொள்கிறேன்."

—இவ்வாறு, 5—8—57-ல், காஞ்சீபுரம் தொகுதி கிராமங்களின் பொதுநல மாநாடு, தண்டலம கிராமத்தில், மாநில முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, வரவேற்புரை ஆற்றுகையில் அண்ணு அவர்கள் கோரிக்கை எழுப்பி, மேலும் குறிப்பிட்டதாவது :—

"காஞ்சீபுரம் தொகுதியிலே இருக்கின்ற பல்வேறு சிற்றூர்களைச் சேர்ந்த நீங்கள் எல்லாம் இவ்வளவு பெருந்திரளாக இங்கே கூடி இருக்கிறீர்கள். நம்முடைய மாநிலத்தினுடைய முதலமைச்சர் காமராசர் அவர்கள் நம்மிடத்தில் நம்முடைய நிலைமைகளை நேரடியாகப் பார்ப்பதற்கும், அதற்கான நல்ல அறிவுரைகளைக் கிராம மக்களுக்குத் தருவதற்கும் வந்திருக்கின்ற விழாவிலே நீங்கள் எல்லாம் கலந்துகொள்ளவேவந்திருக்கின்றீர்கள்.

இந்தச் சிற்றூருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வரவேண்டும் என்றுநான் அவர்களைக் கேட்டுக்கொண்ட நேரத்தில் மிக்க மகிழ்ச்சியோடும், பெரிய பதவியிலே இருக்கின்றவர்கள் வழக்கமாகக் கையாளுகின்ற தயக்கத்தைக் கையாளாமலும் 'தாராளமாக வருகின்றேன்' என்று என்னிடத்தில் அவர்கள் ஒப்பமளித்தார்கள்.

"அவர்களை நான் வரும்படியாகக் கேட்டுவிட்ட பிறகு, அதிலே இருக்கின்ற பெரிய பொறுப்பு எனக்கு உண்மையிலேயே கொஞ்சம் சிக்கலாகத்தான் இருந்தது.'இந்த,வழிகண்டுபிடிக்க முடியாத கிராமத்திற்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்களை வரவழைத்து, கொஞ்சம் தொல்லை தருவதாக ஆகுமோ' என்று ஆயாசப்பட்டேன்.

"ஆனல், நாட்டுக்கே வழி காட்டுவதற்காக நாம் இன்றையதினம் அவர்களை நம்பி இருக்கின்றபொழுது, வழியில்லாது போய்விட்டாலும் இத்தகைய கிராமங்களுக்கு வருவதிலே அவர்கள் மெத்த மகிழ்ச்சியடைவார்கள் என்று எனக்கு நானே சமாதானம் கூறிக்கொண்டேன்.

"இன்றையத் தினம் நாட்டில் கிராமப்புறங்கள் எந்த வகையில் சீர்குலைந்து இருக்கின்றன என்பது, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

"நான் சார்ந்திருக்கின்ற இந்த காஞ்சீபுரம் தொகுதியில், ஏறக்குறைய 130 கிராமங்கள் இருக்கின்றன. இந்தத் தொகுதியில் இருக்கின்ற,இந்தக் கிராமங்களில் வாழுகின்ற மக்கள், மிக்க அடக்க ஒடுக்க உணர்ச்சியோடும், நாட்டினுடைய நன்மையை மனதிலே கருதியும் நீண்ட காலமாகப் பல குறைபாடுகளைத் தாங்கிக் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

"அப்படிப்பட்ட கிராமத்து மக்கள், நம்முடைய நாட்டில் நாட்டின்முதுகெலும்பு என்பதனைத் தெரிந்து கொண்டிருக்கின்ற ஒரு நல்ல தலைவர், இன்றையத் தினம் நம்முடைய மத்தியிலே இருக்கின்றார். அவரிடத்திலே நம்முடைய கிராமத்துத் தோழர்கள், தங்களுக்குற்ற குறைகளை எல்லாம் எடுத்துச் சொல்லிக்கொள்ள வேண்டும் என்று, மெத்த ஆவலோடு இருக்கின்றார்கள்.

"பல கிராமத்தார்கள் தங்களுடைய கிராமங்களில் உள்ள குறைபாடுகளை, இன்னின்ன வகையிலே தீர்க்கவேண்டும் என்று மனு எழுதி முதலமைச்சரிடம் தருவதற்கு இங்கு வந்திருக்கின்றார்கள்.

"அவர்கள் எல்லாம், முதலமைச்சரை நான் முறைப்படி வரவேற்று, அவருக்கு இந்த ஊராரும், இந்த ஊர்ப்பகுதியிலே இருக்கின்ற விவசாய சங்கமும், வரவேற்பளித்து, அதற்கு அவர்கள் நன்றி கூறியான பிறகு, நீங்கள் உங்களுடைய மனுக்களை எல்லாம் அவர்களிடத்திலே தரலாம். அவரும், நமக்குத் தேவையான நல்ல அறிவுரைகளையும், வழிவகைகளையும் நமக்கு எடுத்துச் சொல்லுவார்.

"நம்முடைய மாநிலத்து முதல் அமைச்சர் உண்மையிலேயே, கிராமத்து மக்களிடத்திலே நல்ல அக்கறை காட்டுகின்றவர் எனத் தெரிந்த காரணத்தினலேதான், நானும் அவரும் வேறு வேறு அரசியல் கட்சிகள் என்றாலும், இந்தப் பிரச்சினைகள் கட்சிகளுக்கு அப்பாற்பட்டன என்ற பெருந்தன்மையில், அவர்கள் இன்றையத் தினம் வர இசைந்திருக்கின்றார்கள்.

"ஒரு பெரிய தலைவருக்கு இருக்கின்ற சிறப்பியல்பு, கட்சியைவிட நாட்டு மக்களுடைய தொண்டுதான் முக்கியம் என்பதும், கட்சியே நாட்டு மக்களுக்குத் தொண்டாற்ற இருக்கின்ற கருவிதான் என்பதும், என்றையத்தினம் அவர்களுடைய உள்ளத்தில் ஆழப்பதிகின்றதோ, அன்றையத் தினம்தான் அவர்கள் சாதாரண தலைவர்கள் வரிசையிலிருந்து பெருந் தலைவர்கள் வரிசையில் புகுகின்றார்கள். நம்முடைய மாநில முதமைச்சர் அவர்கள் அத்தகைய பட்டியலில் இடம் மேற்றிருக்கின்றார்கள் என்பதை—அவரை நீண்டகாலமாக எதிர்த்துக் கொண்டுவருகின்ற — இன்னும் நீண்டகாலம் எதிர்க்கப் போகின்ற நான்—மனதார உணர்ந்திருக்கின்றேன்.

"ஆகையினலே அவரை நான் இந்த மாநாட்டிலே வரவேற்கின்றேன் என்றால், கிராமத்துத் தோழர்களின் உற்ற துணைவராக — கிராமத்து நிலைமைகளை ஏடுகளிலிருந்துப் படித்து மறந்து விட்ட தலைவராக அல்ல— நேரடியாக பார்த்து தெரிந்து கொண்டிருக்கின்ற தலைவராக அவரை நான் இன்றையத் தினம் வரவேற்கின்றேன்.

"முதலமைச்சர் அவர்களே! எங்களுடைய தொகுதியில் இருக்கின்ற கிராமத்தை நீங்கள் காண்கின்றீர்கள்—கிராமத்து மக்களை நீங்கள் பார்க்கின்றீர்கள் — நான் பெரிதும் கிராமத்து மக்களை மட்டுமே, உங்களுடைய கண்முன்னல் காட்டவேண்டும் என்று கருதினேன். ஆனல் ஆர்வம் காரணமாக நகர்ப்புறத்து வாலிபர்களும் ஏராளமாக இங்கு கூடி இருக்கின்றார்கள். அவர்கள் கிராமம் அல்ல என்பதை நீங்கள் தயவுசெய்து தெரிந்துகொள்ள வேண்டும்.

"சாதாரணமாக ரொம்ப மலர்ந்த முகத்தோடு இந்தக் கூட்டத்தில் இருப்பார்களானல், அவர்கள் எல்லாம் நகரப்புறத்தைச் சேர்ந்தவர்கள்; 'என்ன நடக்குமோ' என்ற திகைப்போடு இருப்பவர்களை நீங்கள் பார்த்தால், அவர்கள் தான் கிராமத்து மக்கள்! வெள்ளை வேட்டியிலே இருப்பவர்கள் எல்லாம் நகரத்து மக்கள்; 'இன்றையத் தினம் மட்டுமாவது வெள்ளை வேட்டி கட்டிக் கொள்ளலாம்' என்ற வேதனையோடு வந்திருப்பவர்கள் கிராமத்து மக்கள்.

"அவர்கள் வாழுகின்ற ஊர் நாட்டினுடைய முதுகெலும்பு என்பது நமக்கெல்லாம் மிக நன்றாகத் தெரிந்த விஷயம். அவர்கள், தங்களிடத்திலே அபாரமான நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள்.

"நீங்கள் இந்த நாட்டை ஈடேற்றச் செய்வதற்கும், கிராமத்து மக்களுக்கு நல்வாழ்வு அளிப்பதற்கும், உண்மையிலேயே நல்ல ஆற்றலும், அதிகமான அளவிற்கு அக்கறையும் படைத்தவர் என்பதை கிராமப்புறத்திலே உள்ளவர்கள் எல்லாம் கூட தெரிந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகையினலேயே அவர்களுடைய பெரும் நம்பிக்கையையும், மதிப்பையும் பெற்றிருக்கின்ற தங்களை, இந்த சிற்றூருக்கு வரவேற்பதில் உண்மையிலேயே நான் மெத்த பெருமை அடைகிறேன்-மகிழ்ச்சி அடைகின்றேன்.

"நானே அல்லது தாங்களோ, இப்படிப்பட்ட மாநாடுகளிலே வழக்கமாகக் கலந்துகொள்வது இல்லை என்பது நமது இரண்டு பேருக்குமே நன்றாகத் தெரியும். கட்சி மாநாடுகளிலே மட்டுந்தான் அடிக்கடி கலந்துகொண்டு இருக்கின்றோம். ஆனல் இன்றையத் தினம்—கட்சிகள் ஒன்றை ஒன்று தாக்கிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், 'கிராமத்தை அபகரிக்காமல் விட்டுவிடக் கூடாது' என்ற ஒரு பெரிய உண்மையில் இன்றையத்தினம் இப்பெரிய மாநாடு நடைபெறுகின்றது.

"இந்த மாநாட்டிற்கு நான் 'பொதுநல மாநாடு' எனப் பெயரிட்டேன். அந்தப் பெயரிட்ட நேரத்தில், தாங்கள் வருகின்ற நேரத்தில்— இது ஏதாவது கட்சிக்குப் பயன்பட்டுவிடுமோ என்று தங்களுக்குச் சந்தேகம் வராது என்றாலும்—தங்களுடைய துணைவர்களுக்கு வரக்கூடாது என்பதற்காக, இங்கே என்னுடைய நண்பர்கள் தவறுதலாக ஒட்டியிருந்த கருப்பு—சிவப்பு காகிதத்தைக்கூட, காலையில் நான் வந்த நேரத்தில், 'இது அவருடைய கண்ணிலே பட வேண்டாம்' என்று சொன்னேன். 'அது, உங்களுக்கு வேதனை தராது' என்பது எனக்குத் தெரியும்; தங்களுடைய நண்பர்களுக்குச் சந்தேகம் தரக்கூடாது என்பதற்காகத்தான் அவைகளை. எல்லாம் நான் நீக்கினேன்.

"ஏனென்றால், உண்மையிலேயே இந்தக் கிராமத்தில், இந்தத் தொகுதியிலே நான் ஓட்டுச் சேகரிப்பதற்காக வந்த நேரத்தில், இந்த மக்களிடத்தில் மூன்று மனப்பான்மையை. நான் பார்த்தேன்—

"ஒன்று — தேர்தலிலேயே கிராமத்து மக்களுக்கு இன்றையத் தினம் வரவர சலிப்பு அதிகமாக இருக்கின்றது; 'யார் பதவிக்கு வந்தாலும் நம்மை யாரும் கைகொடுத்துத் தூக்குவதில்லை ; எந்தக் கட்சி வந்தாலும், இதைச் செய்வோம்—அதைச் செய்வோம் என்று மடமடவென்று வரமளிக்கின்றார்களே தவிர, நம்முடைய நிலைமைகளைக் காப்பாற்றுகின்றவர்கள் யாருமில்லை' என்ற சலிப்புணர்ச்சியினல், 'எங்களிடத்தில் எதற்காக ஓட்டு கொடுத்தீர்கள்—ஏன் ஐந்து வருடத்திற்கு ஒரு தடவை தொல்லை தருகிறீர்கள்'—என்று கேட்கின்ற அளவிற்கு சலிப்புணர்ச்சி இருப்பதை கிராமப்புறங்களில் நான் கண்டேன் ;

"இரண்டாவது — கிராமப்புறத்திலே இருக்கின்ற மனப்பான்மை, நாட்டை ஆளுகின்ற சர்க்கார் எந்தக் கட்சியினலே நடத்தப்பட்டாலும், அது பெரும் பகுதி நகரத்திற்குத்தான் பயன்படுகின்றதே தவிர நாட்டுப்புறங்களுக்குப் பயன்படவில்லை என்ற ஒரு எண்ணம் கிராமத்து மக்களுக்கு இருக்கின்றது ;

"மூன்றுவது—அவர்கள் மத்தியிலே இருக்கின்ற எண்ணம், 'எங்களுக்குச் செய்யப்பட வேண்டிய காரியத்தை, எங்கோ இருக்கின்ற

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—8—57 வெள்ளி

உணவு மண்டலம்

தமிழ் நாட்டைப் பொறுத்து உணவுப் பொருள்களின் — குறிப்பாக அரிசியின் விலையேற்றத்தைத் தடுக்கவும், நியாயமான விலையில் போதுமான அரிசி கிடைக்கச் செய்யவுமாக மாநில சர்க்காரும், மத்திய சர்க்காரும் இதுவரை மேற்கொண்ட எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்திருக்கின்றன. இந்த நோக்கத்திற்காக டெல்லி சர்க்கார் மேற்கொண்ட சமீபத்திய முயற்சி—தென் அரிசி மண்டலம் என்று சென்னை, ஆந்திரம, மைசூர், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களையும் இணைத்து ஒரு மண்டலத்தை உருவாக்கியதாகும்.

இந்த மண்டலம் உருவாக்கப்பட்ட நேரத்தில், 'ஆந்திராவில் ஏராளமான அரிசி—இலட்சக் கணக்கான டன் உபரியாகக் கிடக்கிறது; இந்த உபரி அரிசி ஏறத்தாழ சென்னை, மைசூர் மாநிலங்களின் பற்றாக்குறையைச் சமாளிக்கப் போதுமானதாயிருக்கும்; எனவே, ஆந்திராவிலிருந்து இந்த மண்டலத்திற்கு வெளியே அரிசி செல்லாமல் தடுத்து விட்டால், இந்த மண்டலத்திற்குள்ளிருக்கும் மாநிலங்களில் நியாயமான விலைக்குப் போதுமான அரிசி கிடைக்கச் செய்ய முடியும்' என்று கூறப்பட்டது.

ஆனல், மண்டலம் உருவாக்கப்பட்டு ஒரு திங்களுக்கு மேலாகியும், தமிழ் நாட்டில் அரிசி விலை ஏற்றம் நின்றபாடில்லை; ஆந்திராவிலிருந்தும் அரிசி வரவில்லை; மக்களின் துயரமும் துளியும் குறையவில்லை என்ற நிலைதான் இருக்கிறது.

இதில் இன்னுமொரு வேதனையும் தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக உள்ளது. ஏற்கனவே பற்றாக்குறை நிலையிலிருக்கும் தமிழ் நாட்டிற்கு, ஏற்பாட்டின்படி ஆந்திரத்திலிருந்து அரிசி வரவில்லை என்பது ஒருபுறமிருக்க, மிகுந்த பற்றாக்குறையாயுள்ள அண்டை மாநிலமான கேரளத்திற்கு தமிழ் நாட்டிலிருந்து அரிசி செல்வதைத் தடுக்கவும் முடியவில்லை.

நாம் இப்படிக் கூறுவது, தமிழ் நாட்டில் அரிசி விலை ஏறுவதற்கு இதுவும் ஒரு காரணமாயிருக்கிறது என்பதை விளக்குவதற்காக மட்டும்தான் என்பதையும், கேரளத்திற்கு தமிழ் நாட்டிலிருந்து அரிசி செல்லக்கூடாது' என்ற நோக்கத்தினுல் அல்ல என்பதையும் மறந்துவிடக் கூடாது.

'ஆந்திராவில் உபரி அரிசியை வைத்துக் கொண்டிருக்கும் வியாபாரிகள்தான் தமிழ் நாட்டிற்கும், இதர மாநிலங்களுக்கும் அரிசி அனுப்ப மறுக்கிறார்கள்; அதனுல்தான் இந்த மண்டல ஏற்பாடு, ஒரு மாதத்திற்கு மேலாகியும் பலன் ஏதும் தரவில்லை' என்று சென்னை சர்க்கார் அதிகாரிகள் கூறியிருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

இதற்குக் காரணம், தமிழ் நாட்டிற்கோ அல்லது இதர தென் மாநிலங்களுக்கோ தருவதைவிட, பம்பாய் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களுக்கு அரிசி தருவதினுல் அதிக இலாபம் கிடைக்கும் என்று அவர்கள் கருதுவதேயாம்!

ஆனல், இப்படி வியாபாரிகள் கொள்ளை இலாப நோக்குடன் அரிசியைத் தேக்கிவைத்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று டெல்லி சர்க்கார் மந்திரிகள் வாய்ப்பந்தல் போட்டு வருகின்றனரே தவிர, அந்த திசையில் எந்தவித நடவடிக்கையையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை, இதுவரையில்!

மேலும், அண்மையில் நிறைவேறிய அத்தியாவசியப் பொருள் கொள்முதல் சட்டப்படி, ஆந்திரத்தில் கிடைக்கும் உபரி அரிசியை நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்ய ஆந்திர சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறது. இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆந்திர சர்க்கார், தாங்களாகவே நடவடிக்கை எடுப்பார்கள் என்று எவரும், எதிர்பார்க்கக்கூடாது. மண்டலத்தை உருவாக்கிய டெல்லி மூலம்தான் இந்தக் காரியம் நடைபெறவேண்டும் என்று நடைமுறை இருக்கிறதோ, என்னவோ?

எப்படியானுலும், இந்த மண்டல ஏற்பாடு மூலம் பலன் எதிர்பார்த்து ஏமாந்து கிடக்கும் தமிழ்நாட்டு சர்க்கார், உடனடியாக இந்த நிலைகளை, மண்டலத்தை உருவாக்கிய டெல்லிக்கு எடுத்துரைத்துப் பரிகாரம் தேட முற்பட வேண்டும். ஆந்திர அரிசியை அந்த மாநில சர்க்கார் மூலம் கொள்முதல் செய்து தருமாறு கேட்க வேண்டும். அப்படிச் செய்து, தமிழ் நாட்டிற்குள் ஆந்திர அரிசி தாராளமாகப் புழங்குவதினுலாவது, தாங்கள் எதிர்பார்க்கிறபடி, அரிசியின் விலை ஒரு நியாய எல்லையில் நிற்கிறதா என்று பார்க்க வேண்டும். என்ன செய்யப் போகிறார்களோ? எப்போது செய்யப் போகிறார்களோ? இதுவரை மேற்கொண்ட நடவடிக்கைகள் எதுவும் பெற்றுத் தராத ஒரு பலனை, இந்த மண்டல ஏற்பாடாவது பெற்றுத் தருகிறதா என்பதை, இன்னும் கொஞ்சம் பொறுத்து முடிவு செய்யலாம்.

டி.டி.டி. ஆபத்தானது!

பெங்களூர், ஆக. 7—

உணவு தானியப் பொருள்களைப் பாதுகாக்க டி. டி. டி. மருந்தை உபயோகப்படுத்துவது கூடாது என்றும், அதற்கு மாறாக எதிலின்-டி-புரோமைட்டைப் பயன்படுத்தவேண்டும் என்றும் மத்திய சுகாதார அமைச்சர் பட்டேல் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருள்களைப் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க டி. டி. டி. உபயோகிப்பது ஆபத்தானது என்றும் எச்சரித்துள்ளார்.

டேராடுன், ஆக. 7—

கரும்புச் சக்கையிலிருந்து ஆண்டுதோறும் 30,000 டன் செய்தித்தாள் உற்பத்தி செய்யும் திட்டம் பற்றி மத்திய அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் கோஷ் தெரிவித்துள்ளார்.

திராவிட மொழிகளின் தனித் தன்மையை அழிக்க சதி?

எல்லா இந்திய மொழிகளுக்கும் ஒரே பொதுவான லிபி வேண்டுமாம்!

குடியரசுத் தலைவரின் ஆபத்தான யோசனை

ஐதராபாத், ஆக. 7—

எல்லா இந்திய மொழிகளுக்கும் ஒரே பொதுவான லிபி வேண்டும் என்ற ஒரு ஆபத்தான யோசனையைக் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்.

"எல்லோரும் ஒத்துக்கொள்ளக் கூடிய ஒரு பொது லிபியை நாம் ஏற்கலாம் என்ருலும், தேவநாகிரி லிபிதான் சாத்தியமானது; ஏன் என்ருல், அந்த லிபிதான் இந்தியாவின் பெரும்பான்மை மக்களுக்குத் தெரிந்தது"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"ஒரு பொது லிபியில் எல்லா மொழிகளும் எழுதப்பட்டால் அவற்றை எல்லோரும் புரிந்து கொள்ளமுடியும் என்பதை சில ஆண்டுகளுக்கு முன் கல்கத்தாவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி—'தேவநாகிரி' என்ற ஒரு பத்திரிகை மூலம் தெரிந்துகொண்டேன்; அது முதல், இந்திய மொழிகள் அனைத்திற்கும் ஒரு பொது லிபி வேண்டும் என்ற கொள்கையை ஆதரிக்கிறேன்"

என்றும் இராசேந்திரர் கூறியிருக்கிருர்.

ஆந்திர பிரதேச சாகித்திய அகாடமியின் துவக்க விழாவை நடத்திய குடியரசுத் தலைவர், வழக்கம்போலவே, இந்தி மொழியைத் திணித்துவரும் போக்கினை மறைத்துப் பேசியிருக்கிருர்.

"இந்தியாவின் எந்தப் பகுதியிலும், இந்தியைத் திணிக்க எவரும் முயற்சிக்கவில்லை. பலரும் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு மொழி நமக்குத் தேவை. சந்தர்ப்பவசமாக, இந்திதான் பெரும்பாலான மக்களால் பேசப்படும் ஒரு மொழியாக இருந்தது; அதனுல்தான், அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்கள் இந்தியை தேசிய மொழியாக ஆக்கினுர்கள்"

என்றும் அவர் பழைய பல்லவியே பாடியிருக்கிருர்!

தமிழ்நாட்டிற்கு மேலும் 3 செருப்பு தொழிற்சாலைகளாம்!

அரசாங்கம் ஆராய்கிறதாம்!

பல்லாவரம், மதுரை, சேலம் ஆகிய மூன்று இடங்களில் 3 செருப்பு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்.

இந்தத் தொழிலுக்கு ஊக்கமளிக்கும் நோக்கத்துடன், மாணவர்களிடையே கால அணிகளின் அவசியத்தைப் பற்றி பிரச்சாரம் செய்யப்படுமாம்.

குந்தா திட்டத்திற்கு

அந்நிய செலாவணி வசதி

சென்னை, ஆக. 8—

குந்தா நீர் மின்சாரத் திட்டத்திற்குத் தேவையான அயல்நாட்டு நாணய செலாவணி வசதியை மத்திய அரசாங்கம் விரைவில் அளிக்கும் என்று மாநில மின்சார அமைச்சர் இராமய்யா தெரிவித்துள்ளார்.

வாழ்க்கைத்தரப் புள்ளி

சென்னை நகரத் தொழிலாளர் வாழ்க்கைத்தரப் புள்ளி 1957 ஜூலை 27-ந் தேதியுடன் முடிவான வாரத்தில் 375 ஆக இருந்தது; இது முந்திய வாரப் புள்ளியிலிருந்து 2 புள்ளி குறைவாம். காய்கறி, இறைச்சி இவற்றின் விலை குறைவே இதற்குக் காரணமாம்.

மதுரையில் பொறியியல் கல்லூரி: டில்லி அனுமதி

சென்னை, ஆக. 6—

மதுரையில் பொறியியல் கல்லூரியை ஆரம்பிக்க தியாகராசர் தர்ம நிலையத்திற்கு மத்திய அரசாங்கம் அனுமதியளித்துள்ளது. 120 மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

குரலெழுப்பினேம்-உணருகின்றனர்!

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வசதிகள்செய்துதர சர்க்கார் முன்வருகிறது

சென்னை, ஆக. 8—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 'ஷெட்யூல்' வகுப்பினர் நலனுக்காக ரூ. 6,98,128ஐ 1957—58-ம் ஆண்டில் செலவு செய்ய அரசாங்கம் அனுமதித்துள்ளது. உறைவிட வசதிப் பள்ளிகள் அமைப்பும், தொழிற் பயிற்சி உதவிச் சம்பளமும் இதிலிருந்து ஏற்பாடு செய்யப்படும்.

நீலகிரி, திருச்சி மாவட்டங்களில் அவர்களுக்கு 10 புதிய பள்ளிகள் நிறுவப்படும்; ஏற்கனவேயுள்ள 20 பள்ளிகள் தொடர்ந்து நடத்தப்படும். விவசாய உதவி ரூ. 1 இலட்சத்திற்கு அதிகமாகலாம்.

நீலகிரி மாவட்டம் கோட்டகிரியில் ரூ. 40,000 செலவில் ஒரு தச்சுப்பட்டறை அமைக்கப்படும்.

மதுரை, கோவை, வட ஆற்காடு, செங்கற்பட்டு, நீலகிரி மாவட்டங்களில் பெண்களுக்காக 8 குடிசைத் தொழில் நிலையங்கள் நிறுவப்படும்; ரூ. 1,07,400 செலவில் 196 வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மதுரை வட்டம் ஸ்ரீவேட்டைக் காட்டில் மலேரியாத் தடை நடவடிக்கைகளும், கோவை மாவட்டத்தில் இருளர், புலையர், கதார்களுக்கு சத்துள்ள உணவுப் பொருள் விநியோகமும் மேற்கொள்ளப்படுமாம்.

★

பிற்பட்ட வகுப்பினர் நலன்களுக்கு திட்டம்

சில புள்ளி விவரங்கள்

இந்நாட்டு மக்களில் பிற்பட்ட நிலைமையில் உள்ள மக்கள் பிரிவினர்களில் நான்கு பிரதான பிரிவினர்களான தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (மொத்தம் 5½ கோடி பேர்); தாழ்த்தப்பட்ட குடியினர் (2¼ கோடி பேர்); குற்ற பரம்பரையினராக முன்னர் கருதப்பட்டு வந்த குடியினர் (40 இலட்சம் பேர்); இதர பிற்பட்ட வகுப்பினர் (இவர்களுடைய எண்ணிக்கை இன்னும் இறுதியாகக் கணக்கிடப்படவில்லை) ஆகியோரின் நலன்களுக்காக முதல் திட்டகாலத்தில் மொத்தம் ரூ. 42,46,00,000 செலவிடப்பட்டதாம்! அதில் ரூ. 17,52,32,000 கல்வித் துறைக்கும், ரூ. 5,53,67,000 போக்குவரத்து ஏற்பாடுகளுக்கும், ரூ. 3,94,79,000 வைத்தியம், பொது சுகாதாரம் ஆகிய துறைகளுக்கும் செலவிடப்பட்டதாம்!

பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்காக இரண்டாவது திட்டகாலத்தில் சுமார் ரூ. 91 கோடி செலவிட வகை செய்யப்பட்டிருக்கிறதாம்; இதில் ரூ. 59 கோடி மாநில சர்க்கார் துறையிலும், ரூ. 32 கோடி மத்திய சர்க்கார் துறையிலும் செலவிடப்படுமாம்!

இரண்டாவது திட்டத்தில் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் ரூ. 47 கோடி 'ஷெட்யூல்ட்' குடியினருக்கும், ரூ. 27½ கோடி 'ஷெட்யூல்ட்' வகுப்பினருக்கும், ரூ. 9,70,00,000 இதர பிற்பட்ட வகுப்பினருக்கும், ரூ. 4 கோடி குற்ற பரம்பரையினராக முன்னர் கருதப்பட்டுவந்த குடியினருக்கும், ரூ. 2,90,00,000 நிர்வாக ஏற்பாடுகளுக்கும் செலவிடப்படுமாம்!

★

சென்னையில் சேரி ஒழிப்புத் திட்டங்கள்

நிதி உதவி தருவதற்கு டெல்லி முன்வருகிறது

புதுடில்லி, ஆக. 8—

சென்னை சர்க்கார் வகுத்துள்ள 9 சேரி ஒழிப்புத் திட்டங்களுக்கு இந்திய சர்க்கார் ஒப்புதல் அளித்துள்ளனர்; அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ரூ. 16,25,985 அனுமதித்துள்ளனர்.

அத்திட்டங்கள்-மீனும்பாள் சிவராஜ் நகர், கரிமேடுச்சேரி, நொச்சிக் குப்பம், திருவள்ளுவபுரம், வாழைப்பூச்சேரி, திருவேங்கடபுரம், மல்லிக்குப்பம், லாக் நகர் ஆகிய சேரிப் பிரதேசங்கள், நடைபாதை வாசிகளின் குடியிருப்பு வசதித் திட்டம் ஆகியவை சம்பந்தப்பட்டவையாகும்.

மத்திய சர்க்கார் அங்கீகரித்துள்ளபடி இத்திட்டங்களுக்கு மொத்தம் ரூ. 21,67,980 செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் 50 சதவிகிதத்தை-அதாவது ரூ. 10,83,990 மத்திய சர்க்கார் கடனுகத் தரும்; மீதியை, மத்திய-மாநில சர்க்கார்கள் சரிசமமான அளவில் உதவித் தொகையாகத் தருவார்கள்.

இத்திட்டங்களில், பல்வேறு சேரிகளிலிருந்தும் அப்புறப்படுத்தப்படுகிற குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக மொத்தம் 2 188 அபிவிருத்தி செய்யப்பட்ட மனைகளை ஒதுக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது; மனை ஒன்றின் விலை ரூ. 911-லிருந்து ரூ. 1,000 வரையில் இருக்கும். சர்க்கார் நிதி உதவியுடன் மக்கள் சுயமுயற்சி செய்து அபிவிருத்தியடைகிற அடிப்படையில் இத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மாத வருமானம் ரூ. 175-க்கு மேற்போகாத குடும்பங்களுக்கு இந்த மனைகள் ஒதுக்கித் தரப்படும்.

சென்னை - திருவான்மியூரில் திருவள்ளுவர் மன்றத் துவக்க விழா

நடிப்பு-இசைப்புலவர் கே. ஆர். இராமசாமி, என். சீவரத்தினம் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 7—

சென்னை — அடையாற்றை அடுத்த திருவான்மியூரில், 4—8—57-ல், தி. மு. கழகத் தோழர்களின் முயற்சியால் திருவள்ளுவர் மன்றம் துவக்கி வைக்கப்பட்டது.

துவக்க விழாவில், தோழர் என். சீவரத்தினம், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, அ. ச. நடராசன் ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழி வாற்றினர்.

இதுவரை ஊரில் நடந்திராத அளவுக்கு விழா சீரும் சிறப்புமுற நடைபெற்றது; சுற்று வட்டாரங்களிலிருந்து ஏராளமான மக்கள் வந்து குழுமியிருந்து வள்ளுவர் பற்றிய கருத்துரைகளைக் கேட்டு மகிழ்ந்தனர்.

விழாத் துவக்கத்தில் டேப்-இராதாமாணிக்கம் அவர்கள் இன்னிசை வழங்கினார்.

மன்றத்தின் தலைவர் தோழர் தி. இ. பாலசுந்தரம் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

கூட்டம் துவங்குமுன் தலைவரால் தி. மு. கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

மன்றத்தின் செயலாளர் தோழர் சி. ந. சாரங்கபாணி மன்றத்தின் நோக்கங்களையும், செயல் திட்டங்களையும் விவரித்துப் பேசினார்.

பின்னர், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இன்று நீங்கள் துவக்கியிருக்கும் திருவள்ளுவர் மன்றம் சிறந்த முறையில் நாட்டுக்குப் பணியாற்ற வேண்டுமென்பதே என் விருப்பம். நான் சார்ந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பகுத்தறிவுக் கருத்துக்களை இந்த மன்றம் ஏற்று செயலாற்றும் என்று நம்புகிறேன்."

அடுத்து, தோழர் என். சீவரத்தினம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இந்த ஊர் இளைஞர்கள் திருவள்ளுவர் பேரால் ஒரு மன்றம் துவக்குவது காண மகிழ்ச்சியடைகிறேன். இந்த விழா நடக்கும் இடலுக்கு சிந்தனைச் சிற்பி மா. சிங்காரவேலர் பெயரையிட்டிருப்பது அறிந்து மேலும் மகிழ்ச்சியடைகிறேன். தோழர் மா. சிங்காரவேலர் அவர்கள் இந்த ஊரிலேயே வசித்தவர்; என்றாலும், அவரது அரிய சேவைகளையும், போராற்றலையும் பலர் அறிந்திருக்கமாட்டார்கள். அவர் சிறந்த பேரறிஞர்; தனக்குத் தோன்றிய கருத்துக்களை தைரியமாக எடுத்துக் கூறக்கூடியவர். தன்னை ஒரு 'மீனவர்' என்று சொல்லிக்கொள்ள வெட்கப்படாதவர். எல்லோரும் ஓரினம் என்னும் கொள்கையை வலியுறுத்தியதுடன், பகுத்தறிவுக் கருத்துக்களை அள்ளிவீசியவர். பொதுவுடைமைத் தத்துவத்தை இந்த நாட்டில் முதன் முதல் பிரசாரம் செய்தவர். சிங்காரவேலரின் பெயரை நாட்டுக்கு நினைவுபடுத்த நாம்தான்—திராவிட முன்னேற்றக் கழகத்தார்தான்—இருக்கிறோம். வள்ளுவரின் குறள் நெறிப்படி நடந்தவர் சிங்காரவேலர்; எனவே, அவரது பெயரை இத்திடலுக்கு இட்டது மிகப் பொருத்தமாகும்.

"பகுத்தறிவு விதையை இந்த நாட்டில் ஊன்றிய மா. சிங்காரவேலரை அண்ணா அவர்கள் 'சிந்தனைச் சிற்பி' என்றார். தாழ்ந்த சாதி என்று கூறப்பட்ட இனத்தாரும் படித்து, பட்டம் பெற்று பேரறிஞராகத் திகழ முடியும் என்பதை நிரூபித்தவர் சிங்காரவேலர். சாதிகள் ஒழிந்து எல்லோரும் ஓர் குலமாக வாழ—வள்ளுவர் நெறிப்படி மக்கள் சமுதாயம் அமைய சிங்காரவேலர் பாடுபட்டார். அவரது இலட்சியத்தை ஈடேற்றிவரும் ஒரே ஒரு கட்சி இன்று திராவிட முன்னேற்றக் கழகம்தான். இந்த நாட்டில் சாதிசமயமற்ற சமுதாயத்தை உருவாக்க தி. மு. கழகம் ஒன்றினால்தான் முடியும் என்பதை உறுதியாகச் சொல்கிறேன்.

"வள்ளுவரின் அறநெறியான திருக்குறளை நாட்டில் பரப்ப இந்த மன்றம் பாடுபடவேண்டும். வீட்டுக்கு வீடு திருக்குறள் இருக்க வேண்டும். தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் திருக்குறள் கற்றிருக்கவேண்டும். இதற்கு இம் மன்றம் பாடுபடவேண்டும்.

"தமிழர்களுக்கு இன்று வழிகாட்டிகளாக உள்ள திருக்குறளையும், தி. மு. கழகக் கொடியையும் கைகளிலே ஏந்தி, தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் அனைவரும் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

அடுத்துப் பேசிய தோழர் அ. ச. நடராசன் அவர்கள், திருக்குறளில் பொதிந்துள்ள பல அரிய கருத்துக்களை அழகுற எடுத்துக் கூறி, குறளை எல்லா மதத்தினரும் போற்றுவதற்கான காரணங்களை விளக்கி, அரசியலில் அநீதி புரிந்தவர்க்கு அறமே கூற்றமாக அமையும் என்பதற்குச் சான்றாக சிலப்பதிகாரத்தை சுட்டிக்காட்டியதுடன், ஆட்சி எப்படி நடக்க வேண்டுமென்பதற்கு வள்ளுவர் கூறியுள்ளவற்றை எடுத்துக்காட்டினார்.

இறுதியாக தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8-45 மணிக்கு நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

கூட்டத் துவக்கத்தில், பேச்சாளர்களுக்கு மன்றத்தின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தச்சநல்லூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம்

28—7—57 காலை 9-மணியளவில், நெல்லை மாவட்டம் தச்சநல்லூர் தி. மு. கழகக் கிளையின் அமைப்புக் கூட்டம் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது; கூட்டத்தில் பொது உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்; நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

செயலாளர் : எஸ். கே. மதிநாதன்; துணைச் செயலாளர் : சு. கிருட்டினன்; பொருளாளர் : அ. சந்திரன்; மாவட்டப் பிரதிநிதி: வீ. முருகு; மற்றும் ஏழுபேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நெல்லை—பேட்டையில் 'அண்ணா அறிவகம்'

சி. பி. சிற்றரசு திறந்துவைத்தார்

நெல்லை மாவட்டம் பேட்டையில் 24—7—57 மாலை 6-30 மணிக்கு 'அண்ணா அறிவகத்'தை தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் திறந்துவைத்தார்.

இரவு 7-மணிக்கு தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. மதுரை அரசுக்கண்ணன் அவர்களும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்களும் ஆட்சியாளர் செய்துவரும் கொடுமைகளையும், மக்கள் நடந்துகொள்ளும் முறையையும், தி. மு. கழகம் நாட்டிற்கு என் தேவை என்பதைப் பற்றியும் பேசினர். பின்னர், வழக்கறிஞர் தோழர் இரத்திவேல் பாண்டியன் அவர்கள் சிறிதுநேரம் பேசினார். செயலாளர் நன்றிக்குப்பின் கூட்டம் முடிவுற்றது.

நெல்லை மாவட்ட தி. மு. க. கிளைகட்கு :

"மாவட்டச் செயற்குழுவை விரைவில் கூட்டவேண்டியிருப்பதால், மாவட்டத்தில் உள்ள தி. மு. கழகக் கிளைகளின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரின் தெளிவான முகவரிகளையும், செயற்குழு உறுப்பினர்களின் பெயர்களையும் தெரிவிக்குமாறு, மாவட்டத்திலுள்ள கிளைக் கழகங்களின் செயலாளர்களை வேண்டிக் கொள்கிறேன்.

"மாவட்டக்கழகம் தொடர்ந்து செயல்பட, ஆண்டு சந்தாவாக ரூ. 5 அனுப்ப வேண்டுமென்ற தீர்மானப்படி, இந்த ஆண்டுக்கு இதுவரை அனுப்பிய கிளைகள் தவிர, ஏனைய கிளைகள் உடனடியாக அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று, நெல்லை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் எழுதுகிறார்.

'இலங்கைத் தமிழர்போல் மொழிஉணர்ச்சிவேண்டும்'

இரவுப்பள்ளி துவக்கவிழாவில் க. அன்பழகன்

சென்னை, ஆக. 6—

சென்னை-சிந்தாதிரிப்பேட்டை தமிழ் வளர்ச்சி மன்ற இரவுப் பள்ளித் துவக்க விழா, நேற்று இரவு மங்கபதி நாயக்கன் தெருவில் தோழர் தி. மணிவண்ணன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

தோழர்கள் க. அன்பழகன் எம்.எல்.ஏ., அ. பொ. அரசு எம்.சி., ப. க. வேணுகோபால் ஆகியோர் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

கூட்டம் 6 மணிக்கு என்று அறிவிக்கப்பட்டிருந்தது; ஆனால், மழையின் காரணமாக 8 மணிக்குத்தான் கூட்டம் ஆரம்பித்தது. மழை, தூறிக்கொண்டேயிருந்தும், மக்கள் நின்று கொண்டே பேச்சைக் கேட்டனர்.

தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் ப. க. வேணுகோபால் மன்ற நோக்கங்களை விளக்கிச் சிறிது நேரம் பேசினார்.

அடுத்து, தோழர் அ. பொ. அரசு அவர்கள் தமிழ் வளர்ச்சி மன்றம் செய்யவேண்டிய பணிகள் குறித்தும், தமிழின் சிறப்பு குறித்தும் விளக்கிப் பேசினார்.

இறுதியாக தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில், இத்தகைய மன்றங்கள் தோன்ற வேண்டிய இன்றியமையாமை குறித்தும், பிறமொழி ஆதிக்கத்தால் தமிழுக்கு ஏற்பட்ட இன்னல்கள் குறித்தும் அழகுற எடுத்துரைத்தார்.

அவர் மேலும், பேசுகையில், தமிழ் வளர்ச்சிக்குத் தடையாகவுள்ள ஆட்சியாளர் போக்கு பற்றியும், 'திரு'வை நீக்கி 'ஸ்ரீ' போடுவதைக் கண்டித்தும், இந்திவெறியர்களின் தகாத செயல் குறித்தும், தபால் கார்டுகளில் இந்தியை நுழைத்திருப்பது போதாதென்று காசுகளையும் இந்தியில் 'நயா பைசா' என்று அழைக்க டில்லி சர்க்கார் செய்து வரும் அநீதிகளை எடுத்துக்காட்டி விளக்கியதுடன், இலங்கையில் தமிழ் மொழியைக்காக்க கிளர்ச்சி செய்து ஓரளவு வெற்றியும் பெற்றுவரும் இலங்கைவாழ் தமிழர்களைப் போலவாவது தமிழ் நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் மொழி உணர்ச்சிகொண்டு கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

கூட்ட ஆரம்பத்தில் தலைவருக்கும், பேச்சாளர்களுக்கும் மன்றத்தின் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றிகூறலுடன் இரவு 8-45 மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றது.

நெல்லை மாவட்டத்தில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

22—7—57 மாலை 6-மணிக்கு நெல்லை சந்திப்பு கிரீன் லாட்ஜில் நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் தலைமையிலும், தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் முன்னிலையிலும் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

தோழர் சங்கரநாராயணன் செயலாளர் பொறுப்பிலிருந்தும் தோழர் சோதிராசு பொருளாளர் பொறுப்பிலிருந்தும் விலகியதால் தேர்தல் நடைபெற்றது; செயலாளராகத் தோழர் வி. பத்மநாபன் அவர்களும், பொருளாளராக இலக்குமணன் அவர்களும், மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

உடையார்பட்டி :

22—7—57 இரவு 8-மணியளவில் உடையார்பட்டி அழகிரி கிளைவுப் படிப்பகச் சார்பில் ஓர் பொதுக்கூட்டம், வழக்கறிஞர் திரு. டி. செவந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் டபிள்யூ. டி. துரைசாமி, டி. ஆர். சுப்பிரமணியம், என். வி. நடராசன் ஆகியோர் அரசியலாரின் போக்கையும், புதிய வரி விதிப்பையும் கண்டித்துப் பேசிய பின் தலைவர் முடிவுரைக்குப்பின், செயலாளர் ஆ. இலட்சுமணன் நன்றிகூற இரவு 11-30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது.

நாங்குனேரி :

23—7—57 இரவு 8-மணியளவில் நாங்குனேரி தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் தாமரைச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் ஆட்சியாளர் கொடுமைகளையும் தி. மு. கழகம் நாட்டிற்கு எவ்வளவு அவசியம் என்பதுபற்றியும், தோழர்கள் சோசப், டி. ஆர். சுப்பிரமணியம், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்டம் இரவு 10-30 மணிக்கு முடிவுற்றது.

இசைத்துறைக்கு இழுக்கு தேடுவதா?

எம். எம். தண்டபாணி தேசிகர் கண்டனம்

சேலம், ஆக. 8—

சேலம் நகராண்மைக் கழகத்தாரால் நடத்தப்படும் பொருட்காட்சி சாலையில் உள்ள கலையரங்கை 4—8—57-ல், திறந்து வைத்துப் பேசுகையில் இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர் குறிப்பிட்டதாவது :—

"கர்நாடக இசைக்கு மக்கள் ஆதரவு குறைந்து வருவது கண்டு வருந்துகிறேன். 'கூஜா! கூஜா! கூஜா!' என்பதும், 'டல்! டல்!' என்பவையும் பாட்டுகளா? இம் மாதிரியான சினிமாப் பாட்டுகள் தானே இப்பொழுது அதிகமாகின்றன. சினிமா வேண்டாம் என்று சொல்லவில்லை; சினிமாவில் நானும் நடித்தவன்தான். கர்நாடக சங்கீதத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்"

இசை மன்னர் சித்தூர் சுப்பிரமணிய (பிள்ளை) அவர்களுக்கு சேலம் பொருட்காட்சிக் குழுவின் சார்பில் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்திரேட் திரு. அய்யாசாமி (செட்டியார்) பொன்னாடை போர்த்தினார்; அவருடைய இசை நுணுக்கத் திறனைப் பெரிதும் பாராட்டினார்.

தனக்குப் பொன்னாடை போர்த்தி பாராட்டியதற்கு நன்றி தெரிவித்து சித்தூர் சுப்பிரமணியம் பேசினார். (ந. சி.)

கேரள தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

வண்டிப்பெரியார் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 29—7—57 மாலை 6 மணிக்கு துணைச் செயலாளர் தோழர் இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, பாலக்காட்டில் நடந்த மாநாட்டுத் தீர்மானப்படி செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் வண்டிப்பெரியாரில் கேரள தி. மு. க. செயற்குழுவைக் கூட்டுவதென்றும், அதற்கு தோழர் மு. கருணாநிதி அவர்களை அழைப்பதென்றும், இதுபற்றிய விளக்கப் பொதுக் கூட்டம் ஆகஸ்டு இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

நிதி வசூலிப்புக்கு தோழர்கள் அர்ணக்கல் ஜான் கெல்சன், மஞ்சுமலை ஆசீர்ராசு, வண்டிப் பெரியார் ஆறுமுகம், குருதாஸ் ஆகியோரைத் தலைவர்களாகக் கொண்டு 4 குழுக்கள் அமைக்கப்பட்டன.

செயற்குழுக் கூட்டத்திற்கான முழுப்பொறுப்பும் தோழர் லியோன் அவர்களுக்களிக்கப்பட்டது.

சேலத்திலிருந்து மதுரைக்கு 'எக்ஸ்பிரஸ் பஸ்'

சேலம், ஆக. 8—

சேலத்திலிருந்து மதுரைக்கு எக்ஸ்பிரஸ் (துரித) பஸ் ஒன்று புதிதாக 2-ந் தேதி முதல் விடப்பட்டிருக்கிறது. இதுவரை சேலத்திலிருந்து மதுரைக்கு நேர் பஸ் இல்லை. சேலம் மாவட்டத்தில் முதன் முதலாக விடப்படும் எக்ஸ்பிரஸ் பஸ் இதுதான். சேலம் முன்னாள் இராணுவத்தினரின் கூட்டுறவு மோட்டார் சங்கத்தாரால் இந்த பஸ் விடப்படுகிறது.

வானொலி, குடிப்பதற்குக் குளிர்ந்த நீர் ஆகிய வசதிகள் இந்த பஸ்ஸில் வைக்கப்பட்டுள்ளன. 48 பிரயாணிகள் இதில் செல்லலாம்.

எத்திராசு கல்லூரி மாணவிகள் போட்டி

தோழியர் சற்குணம் முதற் பரிசு பெற்றார்

சென்னை, ஆக. 9—

சென்னை எத்திராசு கல்லூரி தமிழ்ச் சங்கத் துவக்க விழாவில் மாணவிகளுக்குப் பேச்சு போட்டி நடத்தப்பட்டுள்ளது.

'கல்லூரியில் போதனா முறை தாய் மொழியில் அமைய வேண்டுமா?' என்பது பற்றிப் பல மாணவிகள் பேசினர்.

இந்தப் போட்டிக்கு 3 ஆசிரியைகள் நீதிபதிகளாக இருந்து, தி.மு. கழகத் தோழியரும், கல்லூரி மாணவியுமான திருமதி எஸ். பி. சற்குணத்திற்கு முதற் பரிசு வழங்கியுள்ளனர்.

பல்வேறு மாநிலங்களிலும் 1956—57ம் ஆண்டில் சொத்துவரி மூலம் மொத்தம் ரூ.2,10,75,135 வசூலாயிற்றாம்! 1957—58ம் ஆண்டில் முதல் மூன்று மாத காலத்தில் வசூலான தொகை ரூ. 22,31,505.

பிடிவாதம் தளர்ந்தது; பிரதான கோரிக்கைகள் ஏற்கப்பட்டன!

வேலை நிறுத்த முடிவை மாற்றிக் கொண்டது பற்றி தபால் ஊழியர் சங்கத் தலைவர்

புதுடில்லி, ஆக. 8—

"இரண்டாண்டுகளுக்கு மேலாக நாங்கள் எழுப்பிவரும் கோரிக்கைகளில் மிக முக்கியமானதை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். 'இரண்டாவது சம்பளக் கமிஷன் வேண்டும்' என்ற அந்தக் கோரிக்கையை முதலில், ஏற்கவே மறுத்தது சர்க்கார்; ஆனால் இப்போது ஏற்றுக் கொண்டிருக்கின்றனர்.

"அதேபோல, 'இடைக்கால நிவாரணம் வேண்டும்' என்ற இரண்டாவது கோரிக்கைபற்றி நேரில் பேச்சுவார்த்தை நடத்தியபோது, பேசுவதற்கே பிரதமர் நேரு மறுத்துவிட்டார்; ஆனால் இப்போது பாராளுமன்றத்தில் பேசுகையில், 'நியமிக்கப்பட்டுள்ள சம்பளக் கமிஷன் இடைக்கால நிவாரணம் குறித்து, ஒரு இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கும்' என்று கூறியிருக்கிறார்.

"அந்த இரண்டும்தான், நாங்கள் தந்திருந்த வேலைநிறுத்த நோட்டீசில் குறிப்பிட்டிருக்கும் ஏழு கோரிக்கைகளில் பிரதானமானவையாகும்; எஞ்சிய ஐந்து கோரிக்கைகளைப் பொறுத்து, கடந்த ஜூலை 26-ந் தேதி பண்டித நேருவுடன் பேசும்போது அவர், அவைபற்றி விவாதிக்கவே மறுத்துவிட்டார். ஆனால், இன்று மக்கள் சபையில், மந்திரி லால்பகதூர் சாஸ்திரி, அவைபற்றி விளக்கமாகப் பேசியிருக்கிறார்; நாங்கள் எழுப்பிய எல்லாக் கோரிக்கைகள் பற்றியும் தெளிவான பதில்கள் தரப்பட்டிருக்கின்றன.

மேலும் பண்டித நேரு அவர்கள், 'வேலைநிறுத்த நோட்டீசைத் திரும்பப் பெற்றுக்கொண்டால் அத்தியாவசிய சர்விசுகள் மசோதா அமுலுக்கு வராது' என்று உறுதிமொழி தந்திருப்பதும், அகில-இந்திய தொழிற் சங்கக் காங்கிரஸ், மற்றும் 150 பாராளுமன்ற உறுப்பினர்களும் முடிவினை மறுபரிசிலனை செய்யுமாறு கேட்டிருப்பதும், நாங்கள் வேலைநிறுத்த முடிவை மாற்றிக்கொள்வதற்குக் காரணமாயிருந்தன"

—என்று, வேலைநிறுத்த முடிவைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கான காரணங்களை விளக்கி, தபால் ஊழியர் சங்கத் தலைவர் பி. என். கோஷ் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

பலரும் மகிழ்ந்தனர்

வேலை நிறுத்த முடிவினை தபால் ஊழியர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டது பற்றி பலரும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

ஊழியர்களின் கோரிக்கைகளில் பிரதானமானவற்றிற்குப் பிடிவாதம் காட்டி வந்த சர்க்கார், கடைசி நேரத்தில் இணக்கம் தெரிவித்ததின் விளைவாக வேலைநிறுத்தம் தவிர்க்கப்பட்டது பற்றி மத்திய சர்க்கார் ஊழியர்களும், தபால் ஊழியர்களும் மகிழ்ச்சி தெரிவித்திருக்கின்றனர்.

பல கட்சித் தலைவர்களும், சர்க்கார் கடைசி நேரத்திலாவது ஊழியர்களை ஓரளவேனும் திருப்தி செய்ய முற்பட்டதற்காகப் பாராட்டினர்.

நேரு பண்டிதர் இணக்கம்

பண்டித நேரு, மக்கள்சபையில், நியமிக்கப்பட்டுள்ள கமிஷன் இடைக்கால நிவாரணம் பற்றி கவனிக்கும் என்றும், தனது இடைக்கால அறிக்கையில், கமிஷன், எந்தத் தேதியிலிருந்து நிவாரணம் தரலாம் என்பதை அறிவிக்கலாம் என்றும் அறிவித்த சில மணி நேரத்திற்செல்லாம் ஊழியர் சங்கத் தலைவர்கள், பண்டிதரின் உறுதிமொழியை மதித்து, வேலைநிறுத்த முடிவை மாற்றிக்கொண்டனர்.

வழக்கம்போல!

வேலைநிறுத்த அறிவிப்பை ஒட்டி, தபால் நிலையங்களில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் உடனடியாகத் தளர்த்தப்பட்டுவிட்டன என்றும், வழக்கம்போல வேலைகள் இன்று துவங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுவிட்டது.

நாளை

தண்டலம் மாநாட்டில், முதலமைச்சர் காமராசர் அவர்கள் ஆற்றிய உரை நாளை (10—8—57) வெளிவரும்.

மதுரையில் அண்ணா

11—8—57 காலை 10மணிக்கு மதுரை பழனி டாக்கீசில் வழக்கறிஞர் பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் சிறப்புக்கூட்டத்தில் **அண்ணா** அவர்கள் கலந்துகொண்டு, '1967' என்னும் பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றுவார்.

தோழர் நாகூர்-அனீபா அவர்கள் இன்னிசை வழங்குவார்.

அன்று மாலை 7-மணிக்கு, திலகர் திடலில் டாக்டர் அருணாசலம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; **அண்ணா** அவர்களும், தோழர் எஸ். முத்து அவர்களும் பேசுவர்.

சேலம் தேர்தல்வழக்கு நிதி சிறப்புக் கூட்டம்

11—8—57 காலை 9 மணிக்கு குடந்தை மீனாட்சி தியேட்டரில் தோழர் கே.கே. நீலமேகம் தலைமையில் ஷி கூட்டம் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'குறள் நெறி' என்பது குறித்துச் சொற்பொழி வாற்றுவார்.

பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு தாராசுரம் ஊராட்சி மன்ற வரவேற்பு

11—8—57 மாலை 4-30 மணிக்கு தி. மு. க. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு தாராசுரம் ஊராட்சி மன்றச் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும்.

வட ஆற்காடு மாவட்ட தி.மு.க. 3-வது மாநாடு ஒத்திவைப்பு

இந்தத் திங்கள் 17, 18 ஆகிய நாட்களில் திருவண்ணாமலையில் நடைபெறவிருந்த வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. க. 3-வது மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

நடைபெறும் நாட்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

—வரவேற்புக் குழு

கழகக் கூட்டங்கள்

சேண்பாக்கம் :
வேலூர்அடுத்தமுள்ளிபாளையத்தில்
11—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : வே. சு. பாண்டியன்
பேசுவோர் :
சிற்றூளி-சுப்பிரமணியம்
தி. அ. தாமஸ்என்றி
இரா. இலட்சியவாதி

★

சலகண்டபுரம் :
திரு. வி. க. திடலில்
10—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் :
ஏ. கே. கே. இராசமாணிக்கம்
பேசுவோர் :
டி. கே. தாமரைச்செல்வன்
ப. கண்ணன்
இரா. தாண்டவன்
ப. இராமலிங்கம்

★

வெற்றிலைக்காளிபாளையம் :
வ. உ. சி. திடலில்
11—8—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா
தலைவர் : இரா. மதிவாணன்
பேசுவோர் :
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.
எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

சென்னை—மயிலை :
(44-வது வட்டம்)
மயிலை தலையாரித் தெருவில்
(அமில்டன் வாராவதி அருகில்)
தி. மு. கழக 8-வது ஆண்டுவிழா
10—8—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : பி. இராமசாமி
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
க. அறிவழகன்
பி. பாலசுப்பிரமணியம்

★

தாராசுரம் :
கடைத்தெரு அருகில்
11—8—57 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு
தலைவர் : எஸ். விசயராகவன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கே. கே. நீலமேகம்

★

நாகப்பட்டினம் :
அவுரித் திடலில்
10—8—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

தண்டலம்மாநாட்டில் அண்ணா விளக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் தீர்மானிப்பதைவிட நாங்களே தீர்மானித்து, எங்களிடத்திலே அதற்கான வழிவகைகளைத் தந்து, எங்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தால், நாங்கள் அதை விடத் திறமையாகச் செய்து முடிப்போம்' என்று சொல்லத்தக்க ஒரு மனப்பான்மை கிராமப்புறத்து மக்களிடத்திலேயே இருப்பதை நான் பார்த்தேன்.

இந்த மூன்று மனப்பான்மையும் மக்களாட்சிக்குத் தேவையான மனப்பான்மைகள். இவைகள் எல்லாம் அதிருப்தியிலே விளைந்தவை என்று மட்டும் தள்ளிவிடுவதற்கில்லை.

"மனம் குமுறினால், குமுறுகின்ற மனதிலிருந்து நியாயமும் நீதியும் கிடைக்குமென்பது அரசியல் வரலாறு கண்டறிந்திருக்கின்ற உண்மை.

"ஆகையினாலே இவ்வளவு பக்குவப்பட்டிருக்கின்ற இந்தக் கிராமத்து மக்களுக்கு நல்வழி காட்டுவதற்கும், அவர்களுடைய விவசாயம் செழித்து ஓங்குவதற்கும், ஒரு கிராமத்திற்கு ஒரு கிராமம் தொடர்பு ஏற்படுத்தத்தக்க நல்ல பாதைகள் அமைப்பதற்கும், குடிதண்ணீர் வசதிகள் அமைப்பதற்கும், இப்படிப்பட்ட காரியத்திற்குத்தான் இன்றைய தினம் பெருவாரியான மக்கள், தங்களுடைய மேலான ஆதரவை நாடி நிற்கின்றார்கள்.

"அரசியல் வட்டாரத்திலே உள்ளவர்கள், அரசியலில் கட்சிகளிலே உள்ளவர்கள், இப்படிப்பட்ட தொகுதி குறைபாடுகளைப் போக்கிக்கொள்ளுவதற்கு மூன்று வழிகளைக் கையாளுவது தங்களுக்குத் தெரியுமென்பதை நான் நினைவூட்டுகின்றேன்—

"ஒன்று—'இவ்வளவு குறை இருக்கிறது, 'குறை இருக்கிறது' என்று மக்களிடத்திலே அதிருப்தியை மட்டும் கிளப்புவது ஒரு வழி;

"மற்றொன்று—'இவ்வளவு குறை இருக்கிறது; ஆகையினால் கிளர்ச்சி நடத்துங்கள்' என்று தூண்டிவருவது இரண்டாவது வழி;

"மற்றொன்று — 'இவ்வளவு குறை இருக்கின்றது நேரடியாகக் காணுங்கள்' என்று ஆட்சியாளர்களைக் கொண்டு வருவது மூன்றாவது வழி.

"நான் மூன்றாவது வழியைப் பின்பற்றி இருக்கின்றேன். இந்த மூன்றாவது வழி பலனளிக்கும் என்று நான் உண்மையிலேயே நம்புகின்றேன். ஏனென்றால், இதிலே கொள்கைப் பிரச்சினை எதுவுமில்லை; இதிலே கொள்கைத் தகராறு எதுவுமில்லை.

"எந்தக் கட்சியும், வறுமையை நீக்க வேண்டும் — அறியாமையைப் போக்க வேண்டும்— கிராமப்புறத்து நிலைமையை உயர்த்த வேண்டும்'—என்ற அடிப்படைக் கொள்கையில் ஒரு மாதிரியான மாறுபாடுகளைக் வைத்துக் கொண்டில்லை ஆகையினாலே அரசியல் கருத்து வேற்றுமை இல்லாத அடிப்படைப் பிரச்சினைகளில் எந்தக் கட்சியும் ஒத்துழைக்க முடியும் என்ற ஒரு மனப்பான்மையை நான் கொண்டிருக்கின்ற காரணத்தினால், தங்களிடத்திலே பெருமதிப்பும் பெரிய நம்பிக்கையும் வைத்து, இந்தத் தொகுதி மாநாட்டைக் கூட்டினேன், தாங்களும் அரசியல் பெருந்தன்மையோடு இதில் கலந்துகொள்ள வந்திருக்கின்றீர்கள். தங்களை 'வருக, வருக' என்று கிராமத்தார் சார்பிலேயும், தொகுதி மக்கள் சார்பிலேயும், என்னுடைய சொந்தச் சார்பிலேயும் நான் மனங்கலந்த நன்றியறிதலைக் கூறி வரவேற்கின்றேன்"

வேலைநிறுத்தம் ?

கோவை, ஆக. 8—

பைகாரா மின்சார இலாகா இயக்கும் ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர்.

ஒரேமாதிரியாக ரூ. 2 பிரயாணப்படியும் இலவசமாக வீடு, உடை, மின்சார வசதிகளும் உடனடியாகத் தரப்பட வேண்டுமென்றும் அவர்கள் கோரியுள்ளனர். கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால் வரும் 15-ந் தேதிக்குப் பிறகு முன்னறிவிப்பின்றி வேலைநிறுத்தம் செய்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டில் மொத்தம் 1,84,604 பேர்களுக்கு வேலை தேடித்தரும் நிறுவனங்கள் மூலம் வேலை அளிக்கப்பட்டதாம்!

பொன்மலைப்பட்டி தமிழ் மன்றப் பொதுக்கூட்டம்

11—8—57 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, பொன்மலைப்பட்டி வ. உ. சி. திடலில் தோழர் தி. அப்பாதுரை தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி எம்.எல்.ஏ., கு. பராங்குசம், பி. சி. கணேசன் ஆகியோர் பேசுவர்.

வேலூர் முத்தமிழ் மன்றத் துவக்கவிழா

11—8—57 *மாலை 6-மணிக்கு வேலூர் குயப்பேட்டை மாசிலாமணி முதலி வீதி 44-1 எண்ணுள்ள இல்லத்தில் தோழர் மா. பா. சாரதி எம்.சி., எல்.எல்.ஏ., தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் மன்றத்தை துவக்கிவைப்பார். தோழர் ஏ.கே. வில்வம் கொடியேற்றுவார்.*

திருப்பூர் தனலட்சுமி, எஸ்.ஆர்.சி. ஆசர் ஆலைத்தொழிலாளர்களுக்கு:

"ஆலைகளில் பணிபுரியும் தி. மு. க. தொழிலாளர்கள், ஆதரவாளர்கள் எல்லோரும் இனி, ஆலைத் தொழிலாளர் அமைப்புக் குழுச் செயலாளர் தோழர் டி. பி. சுப்பிரமணியம் அவர்களுடன் தொடர்பு கொண்டு ஒத்துழைக்கக் கேட்டுக்கொள்கிறேன்" என திருப்பூர் நகர தி. மு. க. செயலாளர் தோழர் என். பால்ராசு அறிவிக்கிறார்.

கோவை அழகிரி படிப்பக 5-வது ஆண்டுவிழா

11—8—57 *காலை 9-மணிக்கு, தியேட்டர் ராயலில் மேற்படி விழா தோழர் எஸ். ஏ இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும். அதுபோது சட்டமன்ற உறுப்பினர்களான தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, ஏ. கோவிந்தசாமி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.*

பெங்களூர் தமிழ் இலக்கிய மாநாடு

11—8—57 *அன்று, பெங்களூர் இளங்கோ மன்றச் சார்பில் மேற்படி மாநாடு திரு. தண்கி. வேங்கடாசலனார் தலைமையில் நடைபெறும். தோழியர் எஸ். கே. செகதீசுவரி மாநாட்டைத் துவக்கிவைப்பார். தமிழறிஞர்கள் பலர் கலந்துகொள்வர்.*

ஆலந்தூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்களுக்கு :

11—8—57 *காலை 9 மணிக்கு, கழக மாடியில், பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் துணைச் செயலாளர், மற்றும் மூன்று செயற்குழு உறுப்பினர்கள் தேர்தல் நடைபெறும்.*

சொற்பயிற்சி மன்றம்

11—8—57 *காலை 10 மணியளவில் மேற்படி மன்றத்தின் வாராந்திரக் கூட்டம் கோபி தி. மு. க. அலுவலகத்தில் நடைபெறும். 'திராவிடம் அன்றும் - இன்றும்' என்னும் பொருள் பற்றிப் பலர் பேசுவர்.*

திராவிட முன்னேற்றக் கழகத் துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.